பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் எண்: 222

நிறுவனத்தின் பெயர்: பதிவாளர் ஜெனரல் துறை

பாராளுமன்ற பொதுக் கணக்குகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் குறித்து நிலையியற் கட்டளை எண் 119(4) இன் கீழ் நிறுவனங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரால் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டுக் கோவை இல:- 222

நிறுவனத்தின் பெயர்:- பதிவாளர் நாயகம் திணைக்களம்

| குழு கண்டறிந்த குறைபாடுகள் | இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம் |
|---|---|
| இ - காணி, குடித்தொகை, இ - பிறப்பு, திருமணம், இறப்பு மற்றும் இ- உரித்து போன்ற மென்பொருள் திட்டங்கள் தொடர்பாக | இ-காணிகள் திட்டம் 3 கட்டங்களைக் கொண்டது.அதன் முதலாம் கட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 2024ம் ஆண்டிற்குள் 9 காணிப்பதிவகங்களில் நிறுவப்பட்டுள்ளன. |
| | மேலும், 2024ம் ஆண்டின் டிசம்பர் மாதத்திற்குள் இரண்டாம் கட்டம் நிறைவு செய்யப்பட்டு, முன்னோடி காணிப்பதிவகங்கள் 9 இல் தற்போது 6 காணிப்பதிவகங்கள் இரண்டாம் கட்டத்தில் செயற்பட்டு வருகின்றன. |
| | இதில் மூன்றாவது கட்டத்தை 2025 டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. |
| | 2025 ஆண்டில், முதலாம் கட்ட காணிப்பதிவகங்கள் 15 ஐ நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஏனைய காணிப்பதிவகங்களில் முதலாம் கட்டத்தை முறையாக நிறுவ தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது நடைமுறையில் உள்ளன. (மொத்த 50 காணிப்பதிவகங்களுக்காக) |
| | இந்த ஆண்டில் 18 காணிப்பதிவகங்களின் இருமடித்தாள்களின் அலகிடல்(ளஉயபெைப) நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மொத்த 50 காணிப்பதிவகங்களில் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் 21 அலுவலகங்களின் அலகிடல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டின் இறுதிக்குள் அலகிடல் நடவடிக்கைகள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள காணிப்பதிவகங்களின் எண்ணிக்கை 39 ஆகும். |
| | இந்த மென்பொருளின் மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்த பிறகு சுயஅளை தகவல் முறைமையில் ஒருங்கிணையக் கூடியதாக இருக்கும். |
| | ஆன்லைன் முறையில் ஆவணப் பிரதிகளை வழங்குவதற்கான மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட வேண்டி உள்ளது. |

| | |
|---|---|
| | 2024 ஆம் ஆண்டில் மென்பொருளுக்குத் தேவையான உபகரணங்களை பெறுவதற்கான ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறவில்லை. |
| பிறப்புச் சான்றிதழ் பதிவு இலக்கமாக தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்தும் நடைமுறை | இந்த திணைக்களத்தினால் நடைமுறைபடுத்தப்படும் இ-குடித்தொகை திட்டத்தின் கீழ், 2021.01.01 க்குப் பிறகு நிகழும் அனைத்து பிறப்புகளுக்கும் தேசிய பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் பணி தற்போது 23 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது.<br><br>அதேபோல், திருகோணமலை மாவட்டத்தில் தேசிய பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் பணி 26.08.2025 அன்றும், அம்பாறை மாவட்டத்தில் தேசிய பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் பணி 27.08.2025 அன்றும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>இந்த தேசிய பிறப்புச் சான்றிதழை வழங்குவதில், ஆட்பதிவுத் திணைக்களத்துடன் இணைந்து ஒவ்வொரு பிறப்புக்கும் ஒரு தனித்துவமான அடையாள இலக்கம் வழங்கப்படுவதுடன், தற்போது, இந்தத் திட்டம் அமுலில் உள்ள 23 மாவட்டங்களில், தேசிய பிறப்புச் சான்றிதழ்கள் இந்த தனித்துவமான இலக்கத்துடன் வழங்கப்படுகின்றன. |
| | இந்த தனித்துவமான அடையாள இலக்கம், 15 வயதில் தனிநபருக்கு வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை இலக்கமாகும்.<br><br>இந்த இலக்கம் தேசிய பிறப்புச் சான்றிதழில் “எனது இலக்கம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>இந்த தனித்துவமான அடையாள இலக்கத்தை வழங்குவது தொடர்பாக, 10.11.2021 தேதியிட்ட அமைச்சரவை சுற்றுநிருப இல. ஆழுனு.ஃஊீ.ஃஐயு.ஃ170.ஃ2021 இன் ஒப்புதலின்படி, 28.06.2022 அன்று ஆட்பதிவுத் திணைக்களத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது. |

..........................................

ஏ.எஸ். ஆலோக பண்டார

செயலாளர்,

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு